( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-02

# வினாத்தாள் - I

சுட்டெண்:- ..................................

நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - *** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - *** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**


(01) பின்வரும் மூன்று உருக்களில் வேறுபாடுடைய உருவைத் தெரிவு செய்க.

(1) 

(2) 


(3) 




(02) பின்வருவனவற்றுள் எந்த மூன்று வடிவங்களை இணைப்பதனால் வட்டம் ஒன்றைப் பெற முடியும்?




(1) P, Q, S (2) T, S, R (3) Q, S, T


(03) முதலில் தரப்பட்டுள்ள உரு நிரையில் அடுத்து இடம்பெற வேண்டிய உரு,



(1)  (2)  (3) 

Education கல்வி




(04) உயரம் வேறுபாடுடைய ஐந்து தூண்கள் ஒன்றுக்கொன்று 2 மீற்றர் தூரத்தில் உருவில் காட்டியுள்ளவாறு நடப்பட்டுள்ளன.





உயரம் அதிகரிக்கும் ஒழுங்குமுறைப்படி அந்தத் தூண்களை ஒன்றுக்கொன்று 2 மீற்றர் தூரத்தில் அமையுமாறு வரிசைப்படுத்துவதற்கு ஆகக் குறைந்தது எத்தனை தூண்கள் இருக்குமிடம் மாற்றப்பட வேண்டும்?

(1) ஒன்றினது (2) மூன்றினது (3) இரண்டினது


(05) பூக்கள், வெள்ளை நிறப் பூக்கள், சிவப்பு நிறப் பூக்கள் என்பவை காட்டப்பட்டுள்ள உரு,

(1)  (2)  (3) 




(06) 



உருவில் இரு முக்கோணங்களுக்கும் பொதுவான எண்கள்,

(1) 3, 8 (2) 2, 8, 6 (3) 4, 2

(07) 

உருவில் தரப்பட்டுள்ள திண்மத்தை புள்ளிக்கோட்டின் வழியே வெட்டுவதன் மூலம் கிடைக்கும் முகத்தின் வடிவம்,

(1)  (2)  (3) 

(08) 


இச்செவ்வக வடிவக் கம்பிச் சட்டகத்தை A எனும் இடத்தினால் வெட்டி விரிப்பதன் மூலம் கிடைக்கும் கம்பியின் நீளம்,

(1) 10 cm (2) 14 cm (3) 12 cm

(09) ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ள எண்வரிசையைத் தெரிவு செய்க.

kalvi.lk

(1) 80, 70, 60, 50, 40 (2) 3, 6, 10, 12, 15 (3) 1, 4, 9, 16, 26

(10) நாளை மறுநாள் 17 ஆம் திகதி எனின், நேற்று முன்தினம்,

(1) 12 ஆம் திகதி (2) 13 ஆம் திகதி (3) 14 ஆம் திகதி

(11) எனக்கு 3 சகோதரிகளும் 4 சகோதரர்களும் உள்ளனர். எனது அண்ணனுக்கு 4 சகோதரிகளும் 3 சகோதரர்களும் உள்ளனர். அதன்படி, எனது பெற்றோருக்கு உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை,

(1) 4 மகள்களும், 4 மகன்களும் (2) 3 மகள்களும், 4 மகன்களும் (3) 4 மகள்களும், 3 மகன்களும்


(12) ஜனவரி மாதத்தில் சரிநடுவில் வரும் திகதி,

(1) 15 (2) 16 (3) 14

(13) 

அடைப்புக்களுக்குள் உள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும்போது கிடைக்கும் சொல்,

(1) LET (2) THE (3) TEN

(14) 

இப்பெரிய கனவுருவைப் புள்ளிக்கோடுகளின் வழியே சமனான சிறிய சதுரமுகிகளாக வெட்டப்பட்டால் கிடைக்கும் சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை,

(1) 18 (2) 20 (3) 16

(15) ஒரு தொகுதியில் உள்ளடக்குவதற்கு மிகப் பொருத்தமான இரு பொருட்கள்,



A B C D E

(1) A உம் C உம்

(2) C உம் D உம்

(3) B உம் E உம்

(16) பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ள விலங்கு வகைகளில் இரண்டிற்கு மாத்திரம் பொருத்தமான கூற்று,



(1) பால் குடித்து வளரும்

(2) இரவு வேளையில் நடமாடும்

(3) பறக்க முடியும்.

(17) காலத்திற்கேற்ப ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ள விடையை தெரிவு செய்க.


(1) பகல் - மாலை - காலை - இரவு (2) இரவு - காலை - பகல் - மாலை

(3) மாலை - காலை - இரவு - பகல்

(18) "ரமேஷ் ஒரு ஏழைப் பையன். அவனுக்கு புத்தகங்கள் வாங்குவதற்கு பணம் இல்லாததால் நண்பர்களிடம் புத்தகங்களைக் கேட்டு படித்து தேர்வில் தேர்ச்சி பெற்றான்." அதன்படி, ரமேஷ்,

(1) விடாமுயற்சியுடையவன் (2) தந்திரமானவன் (3) பேராசையுடையவன்

(19) அரிசி நிரப்பப்பட்ட சில பாத்திரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.




A B C

பெரிய பாத்திரத்தின் பருமன் சிறிய பாத்திரத்தின் பருமனைப்போல் இரு மடங்காகும். இத்தகவல்களுக்கேற்ப மிகக் கூடிய அரிசியைக் கொண்டுள்ள தொகுதி,

(1) A தொகுதி (2) B தொகுதி (3) C தொகுதி

(20) மீனாவிடம் ரூபாய் 10.00, ரூபாய் 5.00, ரூபாய் 2.00 ஆகிய நாணயக் குற்றிகள் மாத்திரம் உள்ளன. அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபாய் 29.00 ஆகும். அதன்படி, அவளிடம் இருக்கத்தக்க ரூபாய் 5.00 நாணயக் குற்றிகளின் அதிகபட்ச எண்ணிக்கை,

(1) 2 (2) 3 (3) 4

(21) 


உரு A உரு B

உரு A காட்டும் வட்ட வடிவக் கடதாசித் துண்டு புள்ளிக்கோட்டின் வழியே இரண்டாக மடிக்கப்பட்டு அதன் பின்னர் உரு B காட்டும் முறையில் புள்ளிக்கோடுகளின் வழியே வெட்டப்பட்டது. வெட்டிய பின் கிடைக்கும் கடதாசித் துண்டுகளின் எண்ணிக்கை,

(1) 6 (2) 4 (3) 5

kalvi.lk

(22)




குறித்த வகுப்பொன்றிலுள்ள பெண் பிள்ளைகளினதும் ஆண் பிள்ளைகளினதும் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் இவ்வட்ட வரைபினால் காட்டப்பட்டுள்ளன. வகுப்பிலுள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை 18 எனின், வகுப்பிலுள்ள மொத்த பிள்ளைகளின் எண்ணிக்கை,

(1) 30 (2) 36 (3) 24

(23) ஒரு பெட்டியிலுள்ள சிவப்பு நிற முட்டைகளின் எண்ணிக்கை அங்குள்ள வெள்ளை நிற முட்டைகளின் எண்ணிக்கையின் இரு மடங்காகும். அதன்படி, அப்பெட்டியிலுள்ள சிவப்பு நிற முட்டைகளின் எண்ணிக்கையையும் வெள்ளை நிற முட்டைகளின் எண்ணிக்கையையும் கூட்டினால் வருவது,

(1) 21 (2) 19 (3) 25


(24) சதுர வடிவமான காணியொன்றைச் சுற்றி 32 கம்பங்கள் நடப்பட்டுள்ளன. எல்லாப் பக்கங்களிலும் சமதூர இடைவெளியில் கம்பங்கள் நடப்பட்டுள்ளன. அதன்படி, ஒரு பக்கத்திலிருந்து பார்க்கும்போது காணக்கிடைக்கும் கம்பங்களின் எண்ணிக்கை,

(1) 8 (2) 10 (3) 9

(25) ஒரு மனிதன் ரூபாய் 60.00 க்கு ஆறு மாம்பழங்களை வாங்கினான். அதன் பின் அவன் இரு மாம்பழங்கள் ரூபாய் 30.00 வீதம் மீண்டும் விற்றான். அதன்படி, அவன் ஆறு மாம்பழங்களையும் விற்றால் கிடைக்கும் இலாபம்,

(1) ரூபாய் 30.00 (2) ரூபாய் 40.00 (3) ரூபாய் 20.00


(26)



அருகே தரப்பட்டுள்ள இரு உருக்களிலும் நிழற்றப்பட்டுள்ள சிறிய முக்கோண வடிவங்களை ஒன்றன் மீது ஒன்று அமையக்கூடிய வகையில் வைத்ததன் பின்னர் காணக்கிடைக்கும் சிறிய முக்கோண வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 23 (2) 21 (3) 20

(27)




உருவில் காட்டப்பட்டுள்ள தராசு சமநிலையானதாகும். அதன்படி, A, B யின் நிறைகளாக இருக்கக்கூடியது,

(1) A - 4kg , B - 8kg
(2) A - 5kg , B - 6kg
(3) A - 6kg , B - 7kg

(28) பின்வரும் ஆங்கில எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடியின் முன் வைத்துப் பார்க்கும்போது மாற்றம் இன்றி தெரியும் ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட விடையை தெரிவு செய்க.

(1) O L T (2) H M A (3) S V U

(29) கதிர் பாடசாலை மைதானத்தில் A எனும் இடத்திலிருந்து வடக்குத் திசை நோக்கி 30m தூரம் சென்று அங்கிருந்து கிழக்குத் திசை நோக்கி 50m தூரம் சென்று பின் மீண்டும் வடக்குத் திசை நோக்கி 40m தூரம் சென்று மீண்டும் மேற்குத் திசை நோக்கி 50m தூரம் சென்று B எனும் இடத்தில் நின்றான். அதன்படி, A யிற்கும் B யிற்கும் இடையிலுள்ள தூரம்,

(1) 70m (2) 130m (3) 80m

(30) ஒரு குறிப்பிட்ட கம்பியின் நீளம் 1m 20cm ஆகும். அக்கம்பியிலிருந்து 40cm நீளமுள்ள கம்பித் துண்டு வெட்டப்பட்டது. மீதமுள்ள கம்பித் துண்டு சம நீளமுள்ள நான்கு சிறிய கம்பித் துண்டுகளாக வெட்டப்பட்டன. அதன்படி, அச்சிறிய கம்பித் துண்டின் நீளம்,

(1) 10cm (2) 30cm (3) 20cm

(31) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

கன்றை நினைந்தே உள்ளம்
கசியும் பசுவைப்போல
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்.

இப்பாடலின் மூலம் விளங்கிக்கொள்வது,

(1) ஒத்து வாழுதல்.
(2) நன்றி மறவாமை.
(3) தருமம் புரிதல்.

Education கல்வி
kalvi.lk




(32) ரஞ்சனிடம் ஒரே அளவான 27 கம்பித் துண்டுகள் உள்ளன. அக்கம்பித் துண்டுகளினால் இரு சதுரமுகிகளை அமைத்தால் எஞ்சியுள்ள கம்பித் துண்டுகளின் எண்ணிக்கை,

(1) 4 (2) 3 (3) 5

(33) பெட்டியொன்றில் 6 சிவப்பு நிறப் பேனைகளும், 4 நீல நிறப் பேனைகளும், 5 கறுப்பு நிறப் பேனைகளும், 12 சிவப்பு நிறமல்லாத பேனைகளும் உள்ளன. அதன்படி, பெட்டியிலுள்ள மொத்த பேனைகளின் எண்ணிக்கை,

(1) 27 (2) 15 (3) 18

(34)  உருவில் காட்டியவாறு இலக்கங்களின் மீது மையைப் பூசி அவ்விலக்கங்கள் எதிரே அச்சிடப்படுமாறு புள்ளிக்கோட்டின் வழியே மடித்து விரிக்கும்போது புலப்படும் முறை,

(1)  (2)  (3) 


(35) கடிகாரமொன்றின் நிமிட முள்ளானது பி.ப 2.30 யில் இருந்து பி.ப 6.30 வரை எத்தனை தடவைகள் மணித்தியால முள்ளைச் சந்தித்துச் செல்லும்?

(1) 5 (2) 3 (3) 4

(36) 784, 956, 423, 517 ஆகிய எண்களை ஏறுவரிசையில் எழுதும்போது வரும் இரண்டாம் எண்ணினதும் நான்காம் எண்ணினதும் நடுவில் வரும் எண்கள் முறையே,

(1) 2, 5 (2) 8, 2 (3) 1, 5


(37)




இரண்டு பற்சில்லுகளும் சுழலும் திசைகளை மேலே தரப்பட்டுள்ளது. இப்பற்சில்லுகள் சுழலும் திசைகளை அம்புக்குறிகள் மூலம் காட்டப்பட்டுள்ள முறை,


(1) சரியானது (2) தவறானது (3) கூறமுடியாது.

(38)




A, B ஆகிய பெட்டிகளில் மாபிள்கள் வைக்கப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது. பிள்ளையொன்று A பெட்டியிலுள்ள அரைவாசி மாபிள்களை B பெட்டியிலும், B பெட்டியிலுள்ள அரைவாசி மாபிள்களை A பெட்டியிலும் இட்டது. இப்போது A பெட்டியில் உள்ள மாபிள்களின் எண்ணிக்கையானது, B பெட்டியிலுள்ள மாபிள்களின் எண்ணிக்கைக்கு,

(1) குறைவானது (2) சமனானது (3) கூடுதலானது

(39) 

இத்திண்மம் ஒரேயளவான சிறிய கனவுருக்களை ஒன்றுடன் ஒன்று ஒட்டியதன் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திண்மத்திலுள்ள சிறிய கனவுருக்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 15 (2) 13 (3) 16

(40) மூன்று கூடைகளில் பூக்கள் 9 வீதம் வைக்கப்பட்டிருந்தன.

* முதலாவது கூடையிலிருந்து 4 பூக்கள் மூன்றாவது கூடையில் வைக்கப்பட்டது.
* மூன்றாவது கூடையிலிருந்து 7 பூக்கள் இரண்டாவது கூடையில் வைக்கப்பட்டது.
* இரண்டாவது கூடையிலிருந்து 5 பூக்கள் முதலாவது கூடையில் வைக்கப்பட்டது.

இதன்படி, தற்போது இம்மூன்று கூடைகளிலும் இருக்கக்கூடிய பூக்களின் எண்ணிக்கை முறையே,

(1) 9, 11, 7 (2) 10, 11, 6 (3) 12, 10, 5

kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-02

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..........................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - *** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - *** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

காட்டில் சுட்டெரிக்கும் வெயில். அங்கு வாழும் விலங்குகளும் பறவைகளும் ஓரிடத்தில் கூடின. தலைவனான சிங்கம், "எல்லோரும் நான் சொல்வதை கேளுங்கள். நாம் உயிர் வாழ்வதற்கு நீர் அவசியம். ஆனால் இப்பொழுதெல்லாம் போதியளவு மழை பெய்வதில்லை. இதற்கு பிரதான காரணம் காடுகள் அழிக்கப்படுவதே" என்றது.

(i) காட்டின் தலைவன் யார்? ..........................................................

(ii) தன்மை பன்மை பெயர்ச்சொல்லை இனங்கண்டு எழுதுக. ..........................................................

(iii) விசிறியும் சுழியும் வந்துள்ள சொல் எது? ..........................................................

(iv) பந்தியில் வந்துள்ள எதிர்ப்பொருள் சொற்சோடி யாது? ..........................................................

(v) பந்தியில் வந்துள்ள நிறுத்தக்குறிகளின் பெயர்களை எழுதுக. ..........................................................

**(02) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✕) எனவும் எதிரேயுள்ள அடைப்பினுள் அடையாளமிடுக.**

(i) "அவன்" உயர்திணை, ஆண்பால், படர்க்கை, ஒருமைச் சொல்லாகும். ( )

(ii) "வந்தோம்" அஃறிணை, படர்க்கை, பன்மை, வினைச்சொல்லாகும். ( )

(iii) "மாணவன்" உயர்திணை, தன்மை, ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். ( )

**(03) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொற்றொடருக்கும் உரிய தனிச் சொல்லை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(i) தான் பிறந்த நாடு :- ..........................................................

(ii) தனது பொருள் எதையும் பிறருக்கு ஈயாதவன் :- ..........................................................

**(04) கீழே தரப்பட்டுள்ள பெண்பாற் சொற்களுக்குப் பொருத்தமான ஆண்பாற் சொற்களைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(i) குயத்தி :- .......................................... (ii) வீராங்கனை :- ..........................................

**(05) பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறியீடுகளை இடுக.**

ஆசிரியர் இலங்கையின் மிக நீளமான நதி எது எனக் கேட்டார்

**(06) பின்வரும் ஒவ்வொரு சொல்லையும் வைத்து வாக்கியம் அமைக்குக.**

(i) மலை :- ..........................................................

(ii) மழை :- ..........................................................

**(07) பின்வரும் வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

குயில் இனிமையாகக் கூவியது. :- ..........................................................

**(08) "நண்பன்" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.** ..........................................................

**(09) பின்வரும் இணைமொழிகளைப் பூர்த்தி செய்க.**

(i) நகமும் .......................................... (ii) இன்ப ..........................................

**(10) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) Where .................. ( is / are ) my pencils. (ii) He .................. ( has / have ) a bicycle.

kalvi.lk

**(11) பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்தை எழுதுக.**

(i)  :- Co..........b  (ii)  :- Sh..........p

**(12) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**


நான் ஒரு புத்தகம் வாசித்தேன் :- ..............................................................................................

**(13) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.**

எனக்கு அப்பம் வேண்டும். :- ..............................................................................................

**(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

ஒப கவுத ? ..............................................................................................

(15) 



"12 மணிக்கு 25 நிமிடங்கள்" என்பதை இக்கடிகார முகத்தில் வரைந்து காட்டுக. (மணித்தியால முள், நிமிட முள் என்பவற்றைத் தெளிவாக வரைக.)

(16) 8649 எனும் எண்ணில்,

**(i)** இலக்கம் 6 அமைந்துள்ள இடம் யாது? ..............................................


**(ii)** இலக்கம் 8 இனால் வகைகுறிக்கப்படும் பெறுமானம் யாது? ..................................

(17) சிவகுமார் ஓரிடத்திலிருந்து வடக்குத் திசை நோக்கி 20 மீற்றரும் மேற்குத் திசை நோக்கி 10 மீற்றரும் தெற்குத் திசை நோக்கி 20 மீற்றரும் சென்று நின்றான். அதன்படி, அவன் தற்போது ஆரம்பித்த இடத்திலிருந்து எத்திசையில் நிற்கின்றான்?..........................

(18) 

உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி பத்தின் என்ன பங்காகும்? .................................

(19) அண்ணன் மு.ப 10.30 மணிக்கு வீட்டை விட்டுச் சென்று, பி.ப 2.45 மணிக்கு வீடு திரும்பினார். அதன்படி, அவர் எவ்வளவு நேரம் வீட்டை விட்டு வெளியே இருந்தார்? ..............................................

(20) 



**பழ வியாபாரி ஒருவரிடம் ஒவ்வொரு வகையிலும் உள்ள பழங்களின் எண்ணிக்கைத் தொடர்பான விபரங்கள் பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளது.**

**(i)** பழ வியாபாரியிடம் உள்ள அன்னாசிப்பழங்களின் எண்ணிக்கை, பப்பாசிப்பழங்களின் எண்ணிக்கையிலும் 30 அதிகமானதாகும். அதன்படி, பழ வியாபாரியிடம் உள்ள பப்பாசிப்பழங்களின் எண்ணிக்கையை வரைபில் வரைந்து காட்டுக.

**(ii)** பழ வியாபாரியிடம் உள்ள பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................................

(21) தேங்காயெண்ணெய் 250*ml* இன் விலை ரூபாய் 200.00 எனின், 1*l* தேங்காயெண்ணெய்யின் விலை யாது? ..........................

(22) 6m 25cm நாடா ஒன்றிலிருந்து 3m 75cm நீளமுள்ள பகுதியொன்று வெட்டி நீக்கப்பட்டதன் பின்னர், எஞ்சும் நாடாத் துண்டின் நீளத்தை மீற்றரிலும் சென்ரிமீற்றரிலும் எழுதுக. ......................... m ...................... cm


(23) 

உருவில் காட்டப்பட்டுள்ள திண்மத்தின்,

**(i)** விளிம்புகளின் எண்ணிக்கை யாது? .....................

**(ii)** உச்சிகளின் எண்ணிக்கை யாது? ......................  **(iii)** முகங்களின் எண்ணிக்கை யாது? ..................

(24) H, A, L, X, M, T இவ்வாங்கில எழுத்துக்களில் 2 சமச்சீர்க் கோடுகளை வரையக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் எத்தனை உள்ளன? ..............................................................................................

(25) 

நெய்யரியில் இருக்கும் உருவின் பகுதியைச் சமச்சீரான உரு கிடைக்குமாறு பூரணப்படுத்துக.

(26) 1kg 750g கடலையை ஒரு பையில் 250g வீதம் எத்தனை பைகளில் இடலாம்? ..........................

kalvi.lk

(27)

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | | | |

சுட்டெண்:-...........................................

**பின்வரும் நாட்காட்டியை வைத்து வினாக்களுக்கு விடை தருக.**

(i) இந்நாட்காட்டிக்குரிய வருடங்களின் ஒன்றை எழுதுக. ..............................

(ii) இங்குள்ள வியாழக்கிழமைகளின் திகதிகளின் கூட்டுத்தொகை யாது? ........

(iii) நான்காவது திங்கட்கிழமைக்குரிய திகதி எது? ...........................................

(28) ஒரு மேசையில் IV கணிதப் புத்தகங்களும் VI ஆங்கிலப் புத்தகங்களும் உள்ளன. மேசையில் உள்ள மொத்த புத்தகங்களின் எண்ணிக்கையை உரோம எண்குறிகளில் எழுதுக. ...........................................................................................

(29) ஆசிரியரிடமிருந்த 130 புத்தகங்களை ஒரு பிள்ளைக்கு 4 வீதம் விநியோகித்தார். அதன்படி,

(i) 4 புத்தகங்கள் வீதம் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை யாது? ...............................

(ii) புத்தகங்களை விநியோகித்த பின்னர் ஆசிரியரிடம் எஞ்சியிருந்த புத்தகங்களின் எண்ணிக்கை யாது? ...............................

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) மூலவர்ணங்கள் இடம்பெற்றுள்ள விடையை தெரிவு செய்க.
(1) மஞ்சள், சிவப்பு, பச்சை (2) சிவப்பு, மஞ்சள், நீலம் (3) மஞ்சள், கறுப்பு, ஊதா

(31) செக்கு பின்வரும் எத்தொழிலுக்குப் பயன்படுத்தப்படும்?
(1) எண்ணெய்யை பெற்றுக்கொள்வதற்கு (2) வயல் உழுவதற்கு (3) மாவு இடிப்பதற்கு

(32) நிலத்திலுள்ள குப்பை கூளங்களை உக்கச்செய்வது,
(1) அந்துப்பூச்சி (2) இராமபாணம் (3) கறையான்

(33) பச்சையாக உண்ணக்கூடிய உணவு வகை,
(1) உருளைக்கிழங்கு (2) கரட் (3) பூசனி

(34) பல கால்களைக் கொண்ட பிராணிகளாவன,
(1) மரவட்டை, பூரான் (2) சிலந்தி, குளவி (3) உண்ணி, அந்துப்பூச்சி

(35) பூச்சி இனத்துக்குள் அடங்காத விலங்கு,
(1) முசிறு (2) இராமபாணம் (3) சிலந்தி

(36) ஊன் உண்ணிப் பிராணிகள் அல்லாதது,
(1) கழுகு, மீன்கொத்தி (2) பூனை, கோழி (3) சிலந்தி, தவளை

(37) வாகனமொன்று வலதுக் கைப்பக்கமாகவோ இடதுக் கைப்பக்கமாகவோ திரும்பும்போது ஒளிரும் விளக்கின் நிறம்,
(1) மஞ்சள் (2) சிவப்பு (3) வெள்ளை

(38) இலங்கையில் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம்,
(1) அம்பாந்தோட்டை (2) கொழும்பு (3) திருகோணமலை

(39) தேசப்படங்களில் நீர் நிலைகளைக் குறித்துக் காட்டப் பயன்படுத்தும் நிறம்,
(1) கபிலம் (2) நீலம் (3) பச்சை

(40) சூரிய கிரகணம் ஏற்படுவது நாளொன்றின்,
(1) பகலில் அமாவாசை தினத்தில் (2) இரவில் அமாவாசை தினத்தில் (3) பகலில் பௌர்ணமி தினத்தில்

(41) கிராம அதிகாரியினால் வழங்கப்படும் சேவை அல்லாதது,
(1) தேசிய அடையாள அட்டைக்காகத் தகவல்களை வழங்குதல்.
(2) நன்னடத்தைச் சான்றிதழை வழங்குதல். (3) குடும்ப சுகாதாரம் தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்.

(42) தேசியக் கொடியில் காணக்கிடைக்கும் நிறங்களாவன,
(1) சிவப்பு, பச்சை, செம்மஞ்சள், மஞ்சள் (2) பச்சை, நீலம், செம்மஞ்சள், சிவப்பு
(3) மஞ்சள், வெள்ளை, பச்சை, சிவப்பு

(43) தேசிய இலச்சினையிலுள்ள சூரியன், சந்திரன் ஆகிய பகுதி உணர்த்துவது,
(1) தன்னிறைவு (2) சௌபாக்கியம் (3) நிலைத்திருத்தல்

(44) ஆணி வேரில் உணவை சேமித்து வைத்திருக்கும் தாவரம்,
(1) மரவள்ளி (2) கரட் (3) வற்றாளை

Education கல்வி அதியாபன kalvi.lk

(45) கொழுகொம்பைப் பற்றிப் படரும் கொடிகள்,

(1) பாகல், மிளகு (2) வல்லாரை, கெக்கரி (3) வற்றாளை, அடம்பன்கொடி

(46) தேவைப்படும்போது தன்னைத்தானே பாதுகாப்பதற்காக தோலின் நிறத்தை மாற்றிக் கொள்ளும் விலங்கு,

(1) உடும்பு (2) பல்லி (3) ஓணான்

(47) மிகத் தொலைவிலுள்ள இரையைப் பார்ப்பதற்காக கூர்மையான பார்வைத் திறன் கொண்ட பறவை,

(1) செண்பகம் (2) கழுகு (3) ஆந்தை

(48) விற்றமின் C அதிகம் அடங்கியுள்ள உணவுகள்,

(1) தோடம்பழம், எலுமிச்சை (2) நெத்தலி, பசளி (3) கடலை, பயறு

(49) பாம்பு தீண்டிய ஒருவருக்கு உடனடியாகச் செய்ய வேண்டிய முதலுதவி,

(1) காயத்திற்கு கைம்மருந்து இடல். (2) காயத்தை சவர்க்காரமிட்டுக் கழுவுதல்.

(3) காயத்தின் மீது வாயை வைத்து விஷத்தை உறிஞ்சுதல்.

(50) இலங்கையிலுள்ள மாகாணங்களின் எண்ணிக்கை,

(1) 9 (2) 25 (3) 13

(51) வண்ணத்துப்பூச்சிகள் முட்டை இடுவது,

(1) மண்ணினுள் (2) நீரின் மேற்பரப்பில் (3) இலைகளின் கீழ்ப்புறம்


(52) கொல்லன் பட்டறையில் நெருப்பு எரியக் காற்றைப் பெற உதவுவது,

(1) அரிவாள் (2) துருத்தி (3) நங்கூரம்

(53) அலங்காரத் தையல் வகைக்குள் அடங்காத தையல் வகை,

(1) கம்பளித் தையல் (2) சங்கிலித் தையல் (3) சிறுநூலோடித் தையல்

(54)



இம்முறையிலான பாதங்களைக் கொண்ட பிராணி,

(1) கழுகு (2) கோழி (3) வாத்து

(55)



இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ள சங்கீத உபகரணம்,

(1) நாதஸ்வரம் (2) புல்லாங்குழல் (3) கொம்பு

(56) சட்டக்காந்தங்கள் இரண்டு ஒன்றுக்கொன்று அருகேயுள்ள இரு சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**1 ஆவது சந்தர்ப்பம்** [S N] [S N] **2 ஆவது சந்தர்ப்பம்** [N S] [S N]

அதன்படி, பின்வரும் கூற்றுக்களுள் மிகச் சரியான கூற்று,

(1) 1 ஆவது சந்தர்ப்பத்தில் தள்ளும், 2 ஆவது சந்தர்ப்பத்தில் கவரும்.

(2) 1 ஆவது சந்தர்ப்பத்தில் கவரும், 2 ஆவது சந்தர்ப்பத்தில் தள்ளும். (3) இரண்டு சந்தர்ப்பங்களிலும் தள்ளும்.

(57)



இப்பொலிஸ் அதிகாரியினால் வழங்கப்படும் சமிக்ஞை

(1) முன்னாலும், பின்னாலும் வரும் வாகனங்களை நிறுத்துக.


(2) பின்னால் வரும் வாகனங்கள் செல்க, முன்னால் வரும் வாகனங்கள் நிறுத்துக.

(3) முன்னால் வரும் வாகனங்கள் செல்க, பின்னால் வரும் வாகனங்கள் நிறுத்துக.

(58) செண்பகத்தின் கண்களின் நிறம்,

(1) கறுப்பு (2) சிவப்பு (3) வெள்ளை

(59)



இவ்வீதிச் சமிக்ஞையினால் உணர்த்தப்படுவது,

(1) முன்னால் வைத்தியசாலை உள்ளது. (2) முன்னால் அஞ்சல் அலுவலகம் உள்ளது.

(3) முன்னால் நாற்சந்தி உள்ளது.


**(60) "எனது வீட்டுத்தோட்டம் மிகவும் செழிப்பானது." எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

(3) ..............................................................................................................................

kalvi.lk




## தரம் 5

# புலமைத் தேடல்

யாழ்ப்பாணம், வடமராட்சி செ.நிஷாந்தன், செ.விமல் ஆசிரியர்கள் எழுதிய புலமைத் தேடல் புலமைப்பரிசில் எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்கள்

📮 நாடு பூராகவும் CASH ON DELIVERY
( தபால்காரரிடம் விலை 1250/- செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் )

**ORDER NOW**

**HOME DELIVERY**

**075 287 1457**

BUY BOOKS

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page